DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**STC.No.135/2025**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | கலைச்செல்வன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | பாஸ்கரசேதுபதி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.03.2026

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது பணி ஓய்வு பெற்று மானாமதுரையில் வசித்து வருகிறேன். கடந்த 21.09.2024 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது 17 மணிக்கு சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்று தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 டன் புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் காவல் நிலையம் வந்து22.09.2024 ம் தேதி 13 மணிக்கு நிலையம் வந்து குற்ற எண்.226/2024, BNS பிரிவுகள் 296(பி),115(2)ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சாஆ.4 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.**) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சாஆ.5 மற்றும் அ.சா.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை 30.09.2024 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்திற்கு வெளியில் வைத்து கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் காயம்பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.இனிய செல்வக்குமார் அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்றேன். (**அ.சா.1 ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது BNS பிரிவுகள் 296(பி),115(2)ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தேவகோட்டை அரசு மருத்துவரிடம் வாங்கிய விபத்து பதிவேடை சம்பவம் கண்ணங்குடி அருகே நடந்ததாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அ.சா.1 என்னிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் அவர் தர்மர் டீ கடையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்ததாக சொல்லவில்லை என்றால் டீ கடை வாசலில் பேசிக்கொண்டிருந்ததாக சொல்லியுள்ளார். டீ கடை வாசலில் பேசிக் கொண்டிருந்ததாக சொன்னதாக தவறாக சொல்கிறேன் என்றும் டீ கடை அருகில் பேசிக்கொண்டிருந்ததாகதான் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்திலும் என்னுடைய விசாரணையிலும் களைக்கொட்டை தனக்கு பின்னால் வைத்திருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான், கையில்

வைத்திருந்ததாகதான் சொல்லியுள்ளார். அ.சா.1 என்னுடைய விசாரணையில் களைக்கொட்டு கம்பால் அடித்ததாகதான் சொல்லியுள்ளார் என்றும் களைக்கொட்டால் வெட்டியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 என்னுடைய விசாரணையில் சம்பவத்தின்போது தர்மர் டீ கடைக்கு அருகில் ஜாமான்கள் வாங்கிக் கொண்டிருந்ததாக என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 என்னுடைய விசாரணையில் அ.சா.1 ஐ தேவகோட்டை அரசு மருத்துவமனையில் போய் பார்த்ததாகதான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடனே சம்பவம் நடந்த இடத்தை பார்க்க சென்றுவிட்டேன். அ.சா.1 எதிரியுடன் உள்ள முன்பகை காரணமாக கொடுத்த பொய்யான புகாரை சரியாக புலன்விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து எதிரி மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.